பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 77

செவ்வாய்க்கிழமை
11 பெப்ரவரி 2025

தை 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## குளவி கொட்டி ஒன்பது பேர் சிகிச்சையில்!

வவுனியா, பெப். 11
வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் குளவி கொட்டியதில் 9 பேர் பாதிக்கப்பட்டு வவுனியா பொதுமருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் ☞ 11

# தையிட்டி விகாரையை அகற்றவே முடியாதாம்



### மாற்றுக் காணிகளே ஒரே தீர்வு
### புத்தசாசன அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 11
யாழ்ப்பாணம் - தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரையை அந்த இடத்தில் இருந்து அகற்றவே முடியாது. அந்த விகாரை எந்தக் காணியில் அமைக்கப்பட்டுள்ளதோ அந்தக் காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனெவி தெரிவித்துள்ளார். ☞ 11

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக இன்றுமுதல் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 11
தையிட்டி விகாரைக்கு எதிராகவும், தமது காணிகளை மீளக் கையளிக்குமாறு கோரியும் பொதுமக்களும், காணிகளின் உரிமையாளர்களும் இன்றும், நாளையும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். ☞ 09

## மக்களுடன் கலந்துரையாடி திஸ்ஸ விகாரைக்குத் தீர்வு

### அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 11
தையிட்டி விகாரையை உடைப்பதன்மூலம் பிரச்சினை தீர்ந்துவிடுமா? நாட்டில் இனவாதம், மதவாதம் என்பவற்றை மீண்டும் தூண்டாத வகையில் புத்திக் கூர்மையுடன் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தையிட்டியில் ☞ 09

## திஸ்ஸ விகாரையில் கைவைக்க விடோம்!

### கம்மன்பில கதறல்



யாழ்ப்பாணம், பெப். 11
யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரையில் தமிழர்கள் எவரும் கைவைக்க இடமளிக்க மாட்டோம் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் ☞ 11

## டுபாய் சென்றார் ஜனாதிபதி அநுர



கொழும்பு, பெப். 11
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மூன்று நாள்கள் பயணமாக ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுள்ளார்.
ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயிட் அல் நஹியனின் அழைப்பையேற்றே ☞ 11

## மாகாணசபை முறையில் கைவைக்கமாட்டோம்!

### சந்திரசேகரன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 11
மாகாணசபை என்பதை தாம் வென்றெடுத்த உரிமை என்றுதான் தமிழ் மக்கள் கருதுகின்றார்கள். ஆதலால், அந்த உரிமையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கைவைக்காது என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். ☞ 09

## வடமாகாண மக்களுக்கு சீனாவின் சகோதரபாசம்!

யாழ்ப்பாணம், பெப். 11
வடக்கு மாகாணத்தில் வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, 'சீனாவின் சகோதர பாசம்' என்ற தொனிப்பொருளில் உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.
வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டச் ☞ 11

### சுழற்சி முறையில் இனி

## நாடெங்கும் மின்வெட்டு!



கொழும்பு, பெப். 11
நுரைச்சோலை நிலக்கரி மின்னுற்பத்தி நிலையம் செயலிழந்துள்ள நிலையில், அதை மீண்டும் மின்கட்டமைப்பில் இணைக்கும்வரை நாடெங்கும் பகுதியளவில் மின்வெட்டை நடைமுறைப்படுத்த பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ☞ 11

### உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத் தீர்மானம் அறிவிப்பு!

## நாடாளுமன்று வெள்ளியன்று

கொழும்பு, பெப். 11
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்புக்காக, எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றம் கூட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில்; உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்மானம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்தநிலை ☞ 09

முச்சந்தி முராரி



'திஸ்ஸ விகாரையை வைச்சே உவையள் காலத்தைப் போக்காட்டி எங்களைப் பேய்க்காட்டப் போயினம் பாருங்கோ'

இ. போ. ச.

## சாரதிக்கு வாள்வெட்டு மூவர் நேற்றுக் கைது!

கிளிநொச்சி, பெப். 11
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய மூன்று சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த அரச பேருந்துச் சாரதி மீது கடந்த வெள்ளிக்கிழமை வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் படுகாயமடைந்த அவர் கிளிநொச்சி மருத்துவமனை ☞ 11

## ரணில், சஜித் இருவரும் சங்கமிக்கும் தருணமிது!

### இல்லையேல் மக்கள் சபிப்பர் என தம்மாராம தேரர் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 11
ரணில், சஜித் இரண்டுபேரும் விரைவாக ஒரு மேசைக்கு வர வேண்டிய காலம் வந்துள்ளது. இல்லாவிட்டால் மக்கள் அவர்களைப் புதைகுழிக்குச் செல்லுமாறு சாபமிடும் நிலை ஏற்படும் என்று வெலிபன தம்மாராம தேரர் தெரிவித்தார்.
நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையில் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன இணைந்து செயற்படவேண்டியதன் தேவைப்பாடு தொடர்பில் வெலிபன தம்மாராம தேரர் நேற்றுக் கருத்துத் தெரிவித்துள்ளார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ரணில் தலைமையி ☞ 09

மக்கள் ய[illegible] தமிழ் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | ஏனைய |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 10.02.2025 | 3985 | J | 15 49 55 72 | விசேட எழுத்து J |
| ஹந்தஹண ராசி சுப பலன் | 10.02.2025 | 1052 | வெற்றி இலக்கினம்: கடகம் | 01 50 61 62 | |
| NLB ஜய | 10.02.2025 | 0011 | O | 3 0 8 7 | |
| மெகா பவர் | 10.02.2025 | 2091 | E | 22 51 57 61 | சுப்பர் இலக்கம் 20 |
| மஹஜன சம்பத | 10.02.2025 | 5743 | P | 5 5 9 9 3 4 | |
| தன நிதானய | 10.02.2025 | 1773 | Y | 05 23 49 58 | விசேட எழுத்து Y |
| அத சம்பத | 10.02.2025 | 318 | P | 9 9 3 4 | |

# தையிட்டி போராட்டம் ஈ.பி.டி.பி. ஆதரவு

யாழ்ப்பாணம் , பெப். 11
தையிட்டி திஸ்ஸவிகாரை தொடர்பில் காணி உரிமையாளர்களினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள அமைதிவழிப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்குவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் விடுத்த ஊடக அறிக்கையில்,
தையிட்டிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை என்பது சட்டரீதியான அனுமதிகள் எவையும் பெற்றுக் கொள்ளப்படாமல் எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், பூர்வீக நிலங்களை இழந்துள்ள மக்கள் தங்களுடைய காணிகளை மீட்பதற்குத் தொடர் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த அடிப்படையில் காணி உரிமையாளர்களால் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள அமைதிவழிப் போராட்டத்துக்கு பூரண ஆதரவை வழங்கவுள்ளோம் -என்றுள்ளது. (ச-66)

# மரண அறிவித்தல்



பிறப்பு 23 03 1942 — இறப்பு 07 02 2025

## திரு.இளையப்பு கார்த்திகேசு

யாழப்பாணம் பணிக்கர்வளவு பலாலிவீதி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெஹிவளை வின்சர் அவனியூவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளையப்பு கார்த்திகேசு அவர்கள் 07.02.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையப்பு - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம்-நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் விஜிதன், வினோதன், நாகநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரஞ்சனா, பவதாரணி, சாய்ஜெயராம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிருந்தன், டிவியா, அகனியா, ஆதித்தியா, லக்ஷன், லக்ஷனா, அமித்தேஷ், அபிநயா, அக்ஷ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சிவகுருநாதன், மாணிக்கம், சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 12.02.2025 புதன்கிழமை காலை 10.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 13.02.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணி முதல் நடைபெற்று நண்பகல் 12.30 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல் : குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு : நந்தினி - 076 2441955 (மகள்)
விஜி - 004915206383745 (மகன்)
விந்தன் - 0041788248849 (மகன்)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 10.02.2025 | திங்கட்கிழமை | Q | 9 9 2 4 9 8 | 0451 |

## Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 10.02.2025 | திங்கட்கிழமை | 2717 | I | 16 32 44 45 |

## சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 10.02.2025 | திங்கட்கிழமை | C | 57 62 64 66 | 4878 |

## லக்ன ராசி

| திகதி | தினம் | சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 10.02.2025 | திங்கட்கிழமை | | 01 34 38 58 | 4429 |

## KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 10.02.2025 | திங்கட்கிழமை | Y | 03 | 20 45 69 73 | 1893 |

## அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 10.02.2025 | திங்கட்கிழமை | F | 16 38 39 69 | 2543 |

## JAYODA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 10.02.2025 | திங்கட்கிழமை | Z | 06 22 60 68 | 2102 |



# மீளப்பெறப்பட்டது ஹிருணிகாவின் பிடியாணை

கொழும்பு , பெப். 11
வழக்கில் ஆஜராகத் தவறியதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை திரும்பப் பெற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த 2022 ஆம் ஆண்டு கருவாத் தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போராட்டம் ஒன்றை மேற்கொண்ட சம்பவத்துக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கிலேயே அவர் நீதிமன்றில் முன்னிலையாகாமல் இருந்து வந்த நிலையில் இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.
இந்தநிலையில் மனுவொன்றை சமர்ப்பித்து நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகிய ஹிருணிகா பிரேமச்சந்திர, தனக்கு பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை திரும்பப் பெறுமாறு தனது சட்டத்தரணி மூலம் கோரிக்கை விடுத்ததையடுத்து அந்த பிடியாணையை திரும்பப் பெற்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ச-இ)

# வவுனியா வடக்கில் இணைந்து போட்டி!

### ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி அறிவிப்பு

வவுனியா, பெப். 11
உள்ளூராட்சித் தேர்தலில் வவுனியா வடக்குப் பிரதேசசபையில் தமிழ்க் கட்சிகள் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக, ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் சிவசக்தி ஆனந்தன் மேலும் தெரிவித்ததாவது:-
எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் பொதுமக்களின் ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் கேட்டறிந்து மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற வேட்பாளர்களை இனங்கண்டு களமிறக்குவது தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம். அந்தப் பகுதியானது நீண்டகாலமாக சிங்கள குடியேற்றம், பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளால் இன விகிதாசாரத்தில் பாரிய மாற்றம் ஏற்படும் நிலமையில் உள்ளது. எனவே தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடும் பேசி அங்கு இணைந்து போட்டியிட முடியுமா என்பது தொடர்பாக நாம் சிந்திப்போம் - என்றார். (ச-110)

# நீதிக்கட்டமைப்பில் அரசியல் அழுத்தம்

### *கூறுகிறார் கம்மன்பில*

கொழும்பு, பெப்.11
அரசியல் பழிவாங்கல்களுக்காக அரசாங்கம் நீதிக்கட்டமைப்பையும் பயன்படுத்துகிறது. சட்டமா அதிபருக்கு அரசாங்கம் அழுத்தம் பிரயோகிப்பது தெளிவாக விளங்குகிறது என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் பிரசார மேடைகளில் மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களின் விவரங்களை வெளியிடுவதாகவும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான கொடுப்பனவை இரத்துச் செய்வதாகவும் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளன. மக்களைத் தூண்டிவிடுவதற்காக குறிப்பிட்ட விடயங்களைச் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுத்த முடியாது என்பதை அரசாங்கம் தற்போது விளங்கிக்கொண்டுள்ளது. அரசியல் பழிவாங்கல்களுக்காக அரசாங்கம் நீதிக்கட்டமைப்பைப் பயன்படுத்திக்கொள்கிறது. அரசியல் பழிவாங்கலை முன்னிலைப்படுத்தி வழக்குத் தாக்கல்கள் செய்யப்படுகின்றன -என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய அரசாலேயே மின்வெட்டு



கூறுகிறது வலுசக்தி அமைச்சு

**கொழும்பு,பெப்.11**

**முன்னைய அரசாங்கங்களின் திட்டமிடல் இல்லாமையும் தொலைநோக்குப் பார்வையற்ற வேலைத்திட்டமுமே மின்வெட்டுக்குக் காரணம் என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி சுட்டிக்காட்டியுள்ளார்.**

தேசிய மின்சார அமைப்பின் சமநிலையைப் பேணுவதற்கு கடந்தகாலங்களில் எந்தத் திட்டமும் செயற்படுத்தப்படவில்லை. தேசிய மின்சார அமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதில் கடந்தகால அரசாங்கங்கள் உரிய கவனம் செலுத்தவில்லை. தொழில்நுட்பத்தைப் பற்றிய புரிதல் இல்லாத தவறான வழிகாட்டுதலும் இந்த நிலைமைக்குக் காரணம். எனவே காரணங்கள் முழுமையாக ஆராயப்பட்டு, இது போன்ற நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-33)

## பஸ்ஸில் கசிப்புக் கடத்திய சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம் , பெப். 11

தனியார் பேருந்தில் கசிப்பை எடுத்துச் சென்ற சந்தேகநபரொருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.


முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து 25 லீற்றர் கசிப்பை எடுத்துவந்தபோதே சந்தேகநபர் சிக்கினார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின்னர் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்ப டுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-27)

## மாணவர்களுக்கு போதைமாத்திரை

சந்தேகநபர் கைது

வவுனியா , பெப். 11

பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதை மாத்திரைகள் விற்பனைசெய்த குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெப்பித்திகொல்லாவப் பகுதியில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் கைது நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 19 மற்றும் 36 வயதுடையவர்களாவர். சம்பவம் தொடர்பில் மதவாச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



## ஆட்டுக்குட்டிக்கு தாயாகிய நாய்

யாழ்பபாணம், பெப்.11

தாயை இழந்த ஆட்டுக்குட்டிக்கு நாயொன்று பால் கொடுத்த நெகிழ்ச்சிச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்.தென்மராட்சி எழுதுமட்டுவாழ் கிராமத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

தாய் ஆடானது குட்டி ஈன்ற பின்னர் உயிரிழந்துள்ள நிலையிலேயே குறித்த ஆட்டுக்குட்டிக்கு நாய் பாலூட்டி பசி போக்கி வருகின்றது. இது பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. (ச- 25,66)

## கட்டுநாயக்கவில் தோட்டா மீட்பு

கொழும்பு,பெப்.11


கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் உள்ள பயணப்பொதிகள் பகுதிக்கு அருகில் நேற்று தோட்டா ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்த தோட்டாவை மேலதிக விசாரணைக்காக இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## சட்டவிரோத மதுபான விற்பனை பெண்ணொருவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.11

நீண்டகாலமாக சட்டவிரோதமாக சாராயம் விற்பனைசெய்த பெண்ணொருவர் நேற்று 27 கால் போத்தல்கள் சாராயத்துடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்புக் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-27 20)




வீரபாண்டிய கட்டப்பொம்மன் படம் பார்த்திருப்பியள். அதில 'ஏன் வரி கட்டேலை ?' எண்டு ஜாக்சன் துரை கேப்பார். அதுக்கு வீரபாண்டிய கட்டப்பொம்மன் 'வயலுக்கு வந்தாயா? வரப்பு வெட்டினாயா? நாற்று நட்டாயா? களை பிடுங்கினாயா? கஞ்சிக் கலயம் சுமந்தாயா? ' எண்டு ஜாக்சன் துரையைக் கேளாக்கேள்வி கேட்டுப்போட்டு ' மானங்கெட்டவனே உனக்கேன் நான் கட்ட வேண்டும் வரி?' எண்ட முத்தாய்ப்போட பதிலைச் சொல்லியிருப்பார். இப்ப காலம் மாறிப்போட்டுது தானே. அதால நியாயங்களும் மாறிட்டுது.

கிட்டடியில யாழ்ப்பாணம் கச்சேரியில மேலதிக அரசாங்க அதிபரைப் போடுற விசயமா ஒரு சர்ச்சை ஓடிக்கொண்டிருக்குது. கச்சேரிக் கட்டப்பொம்மர் இந்த விசயத்தில தன்ர இஷ்டப்படி சேர்விஸில தங்களைவிடக் குறைஞ்சவரை போட்டிட்டார் எண்டு 9 சிற்றரசர்மார் பொங்கி எழும்பி, மேல்மட்டம் வரைக்கும் கடிதமெல்லாம் போட்டவை. அதில சிலருக்கு இப்ப இடமாற்றம் வந்தது. அதில ஒரு சிற்றரசி தனக்கு வந்த இடமாற்றத்தை நிப்பாட்டச் சொல்லி அப்பீல் போட்டிருக்கிறா. அதைப் பற்றி கட்டப்பொம்மரோடையும் கதைச்சிருக்கிறா. அப்ப கட்டப்பொம்மர் ' நீங்கள் எனக்கு சப்போர்ட்டா நடக்கேலையே. நான் போட்டவருக்கு எதிராக் கடிதம் குடுத்ததில நீங்களும் ஒராள்தானே. அப்ப ஏன் நான் உங்கட அப்பீலை ஏற்று சைன் வைக்கோணும்?'எண்டு ஜாக்சன் துரைக்குச் சொன்னமாதிரி சொல்லியிருக்கிறார். கடைசியா கட்டப்பொம்மர் ஒரு டீல் பேசியிருக்கிறார். 'அந்தக் கடிதத்தில சொன்ன விசயங்களில இருந்து நீங்கள் விலகிறமாதிரி இன்னொரு கடிதம் தாங்கோ. நான் உங்கட அப்பீலை ஏற்றுக்கொள்ளுறன்'எண்டதுதான் அந்த டீலாம். ஆனால் சிற்றரசி அதுக்கு ஒத்துக்கொள்ளேலை. இப்ப அவாவுக்கு இடமாற்றமும் வந்திட்டுது.

இந்த விசயத்தில எந்தப்பக்கம் பிழை, எந்தப் பக்கம் சரி எண்டது எல்லாருக்குமே தெரியும். நல்ல வேலைசெய்யக்கூடிய, கூடக்காலம் சேர்விஸிலையும் இருக்கிறவைக்குத்தானே பதவி உயர்வுகளில முன்னுரிமை வழங்கோணும். அதுதானே நடைமுறையும். அதை விட்டுட்டு தனக்குப் பிடிச்ச ஆக்களுக்கு எந்தப் பதவியையும் கட்டப்பொம்மர் குடுக்கேலாது. அதோடதான் நியமிச்சவருக்கு எதிராக் கடிதம் குடுத்தவை எண்டதுக்காக அதைவைச்சு டீல் பேசுறதும் பிழையான அணுகுமுறைதானே. சனத்துக்குச் சேவை செய்யவேண்டிய நேரத்தை இப்பிடித் தங்கட ஈகோச் சண்டைக்கு பாவிக்காமல் பிரியோசனமா எப்பதான் இவையள் பாவிக்கப்போ யினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகக்கூடும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படக் கூடும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வெளியூர் செல்ல நேரிடும்போது கைப் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.

**மிதுனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாய்வழியில் சில சங்கடங்களைச் சந்திக்க நேரிடும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**கடகம்:** பிற்பகலுக்கு மேல் எதிலும் நிதானமாக செயற்படவும். வாழ்க்கைத் துணை வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களின் சந்திப்பு சங்கடம் தருவதாக இருக்கும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். பழைய கடன்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. சிலருக்கு மகான்களின் தரிசனமும் ஆசிகளும் கிடைக்க வாய்ப்பு உண்டு.


**விருச்சிகம்:** சிறு அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்கள் வருகை உற்சாகம் தரும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பரபரப்பாகச் செயல்படுவீர்கள். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். சகோதர வகையில் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மகரம்:** சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். குடும்பம் தொடர்பான வேலைகளுக்காக பயணம் மேற்கொள்ள நேரிடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**கும்பம்:** மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் உண்டாகும். குலதெய்வக் கோயிலுக்குச் சென்று நேர்த்திக் கடனை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். ஆனால், தேவையான பணம் கையிலிருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நவீனரக ஆடைகளை வாங்கி மகிழும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.



படம் ஐ.சிவசாந்தன்

# நல்லூரான் தெற்கு வாசல் வளைவு இன்று திறப்பு

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ்.நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தெற்கே - கோவில் வீதியில் அமைக்கப்பட்ட அலங்கார தோரண வாசலான "நல்லூரான் தெற்கு வாசல் வளைவு" தைப்பூச நன்நாளான இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு திறக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்து கந்தபுராண கலாசாரத்தை எடுத்தியம்பும் வகையில் இந்த வளைவு அமைக்கப்பட்டுள்ளது. (எ-25,66)

# முகாமைத்துவபீட மாணவர்கள் மோதல்

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீட மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில், இரு மாணவர்கள் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.


புதுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்வில் 3ஆம் மற்றும் 4ஆம் ஆண்டு மாணவர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-25,27)

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வருடாந்த திறனாய்வுப் போட்டிகள், கல்லூரி மைதானத்தில் நாளைமறுதினம் வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம அதிதியாகக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் ஆர்.ரவீந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (எ-25,63)



படங்கள்: ஐ. சிவசாந்தன்





# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 11

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 44, தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இளஞ்சைவப்புலவர் த. மனோஜ்குமார் 'மாணிக்கவாசகரும் எண்ணப் பத்தும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். (ச-25)

# நல்லூர்க்கந்தனில் நெற்புதிர் அறுவடை

யாழ்ப்பாணம், பெப். 11

தைப்பூச தினத்துக்கு முதல்நாள் கொண்டாடப்படும் 'புதிர் தினம்' எனும் பாரம்பரிய நிகழ்வான நெற்புதிர் அறுவடை நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நேற்று சிறப்புற இடம்பெற்றது.

கோயில் அறங்காவலர், சிவாச்சாரியார் முதலானோர் அதிகாலை வேளை ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலுள்ள வயலுக்குச் சென்று முதலாவது புதிரை அறுவடை செய்துவந்தனர்.

அந்த அறுவடை நெல்லில் இருந்து அமுது செய்து நல்லூரானுக்கு படையல் இட்டு பூசைகள் இடம்பெற்றதுடன் பக்தர்களுக்கு அமுதும் அளிக்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# கடைகெட்ட அரசியல்!

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கே தற்போது முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. நாடு பொருளாதார உறுதிப்பாட்டை அடைந்தபின்னரே அரசியலமைப்பு மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார் அமைச் சர் நளிந்த ஜயதிஸ்ஸ. அமைச்சர் என்பதற்கு அப்பால், அமைச்சரவைப் பேச்சாளராகவும் நளிந்த ஜயதிஸ்ஸ உள்ளதால், அவரின் அறிவிப்பை அநுர அரசாங்கத்தின் நிலைப்பாடாகவும் கொள்ளலாம்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தபோது, புதிய அரசாங்கத்தை 'வாராது வந்த மாமணியாகவே' மக்கள் கருதினார்கள். வேடிக்கை என்னவென்றால், இந்த எண்ணப்பாடு தமிழர்கள் மத்தியிலும் இருக்கவே செய்தது. ஆனால், ஒவ்வொரு விடயத்திலும் ஏதோவொரு சம்மட்டி அறையைத்தான் அநுர அரசாங்கம் வழங்கிக்கொண்டிருக்கின்றது. 'படைமுகாம்கள்விலக்கப்பட்டுகாணிகள்விடுவிக்கப்படும்' என்றார்கள், ஆனால் விலக்கப்பட்டது என்னமோ வீதித்தடைகள்தான். 'மக்களின் காணிகள் மக்களுக்கே' என்றார்கள், தையிட்டி திஸ்ஸ விகாரையில் இருந்து புத்தர் புறப்படுவதாகத் தெரியவில்லை. அதன் தொடர்ச்சிதான் அரசமைப்புத் தொடர்பான தற்போதைய அறிவிப்பும். இலங்கையில் தற்போதிருக்கும் அரசமைப்பு முற்றாக மாற்றப்பட்டு, புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். இதன்மூலம் அனைத்துமக்களின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்படும், தமிழர்களுக்கும் தீர்வு வழங்கப்படும் என்றெல்லாம் வாக்குறுதிகளை மூடைமூடையாக அவிழ்த்துக் கொட்டியே தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சியைப் பிடித்தனர். தேர்தல் பரப்புரையின் போது அவர்கள் கூறிய கருத்துகளுக்கும், 'நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கே முன்னுரிமை' என தற்போது வெளிப்படுத்தும் கருத்துகளுக்கும் இடையில் எந்தத் தொடர்புமில்லை. மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாடு அது.


எல்லாவற்றையும்விட, இலங்கையில் பொருளாதார இடர்பாடு ஏற்பட்டமைக்குப் பிரதான காரணமே இனப்பிரச்சினையை உரியவகையில் கையாள்வதில் ஏற்பட்ட தோல்விதான். அரகலய காலத்தின்போதும், அதன் பின்பும்கூட இந்தக் கூற்றின் உண்மைத் தன்மையை தேசம் உணர்ந்தது. அன்று எதிர்க்கட்சியினராக இருந்த தேசிய மக்கள் சக்தியினரும் இதைப் பகிரங்கமாகவே ஏற்றுக் கொண்டனர். இவ்வாறிருக்கையில், 'பொருளாதாரப் பிரச்சினைக்கே முன்னுரிமை' என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடு சிறுபிள்ளைத்தனமானது மட்டுமல்ல, 'பட்டும் புத்தியில்லாத' வகைக்குரியது.

மஹிந்தவின் காலத்தில்... கோத்தாபயவின் காலத்தில்... ரணிலின் காலத்தில்... எனமுறைப்பாட்டு மூடைகளைக் காவிக்கொண்டு திரியும் தேசிய மக்கள் சக்தியினர், தற்போது எவ்வாறான கைங்கரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கின்றனர் என்ற புரிதலைத் தம்முள் ஏற்படுத்த வேண்டும். விமர்சன அரசியலுக்கும், செயற்பாட்டு அரசியலுக்கும் இடையிலான இடைவெளியென்பது இதுதான். உண்மையில் தேசிய மக்கள் சக்தி திராணியுள்ள தரப்பாக இருந்தால், தம் வாக்குறுதிகளை நிறைவேற்றிக்காட்ட வேண்டும். இல்லையேல், வாக்கு வங்கியைக் காப்பாற்றும் கடைகெட்ட அரசியற் கலாசாரம் கொண்ட குழுவாக அதுவும் அடையாளப்படுத்தப்படும். அத்தகைய குழுக்களுக்கு இலங்கையில் ஆயுள் அதிகம் இருந்ததில்லை.

நாளொரு நல்வார்த்தை

அரைகுறையாக எதையும் செய்யாதீர். நல்லவை என்றால் துணிந்து நிறைவேற்றுங்கள். கெட்டது என்றால் அதைச் செய்யாமல் அறவே தவிர்த்துவிடுங்கள்.

– கில்ப்பின் –




காங்கேசன்- நாகபட்டினம்

## கப்பல் சேவை நாளை முதல்



யாழ்ப்பாணம்,பெப்.11

**காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்துக் கப்பல் சேவை நாளை 12ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிவகங்கை கப்பல்சேவை நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.**

அதன்படிநாளைகாலை 7.30 மணியளவில் நாகப்பட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் கப்பல், காங்கேசன்துறையை வந்தடைந்து பின்னர் மீண்டும் பி.ப 1.30 மணியளவில் காங்கேசன்துறையில் இருந்து பயணத்தை ஆரம்பித்து நாகபட்டினத்தைச் சென்றடையும். இந்தக் கப்பல்சேவை செவ்வாய்க்கிழமை தவிர்ந்து வாரத்தில் 6 நாள்கள் இடம்பெறும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-27)

## மின்தடையால் நால்வர் பாதிப்பு

கொழும்பு, பெப். 11

நாடுமுழுவதும் நேற்று முன்தினம் மின்தடை ஏற்பட்ட நிலையில் ஜெனரேட்டரைப் பயன்படுத்திய நால்வர் அதிலிருந்து வெளியேறிய நச்சுப்புகையைச்சுவாசித்து சுகவீனமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நுவரெலியா, பொகவந்தலாவப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. (ச-25)






## பஸ்கள் கோர விபத்து நால்வர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 11

குருநாகல், தோரயாயப் பகுதியில் இரண்டு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு பெண் உட்பட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 28 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துதொடர்பில் மேலதிக விசாரணை களைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-25)

## சிகிரியா முதலிடம்

2025ஆம் ஆண்டுக்கான உலகின் மிகவும் வரவேற்கத்தக்க நகரங்கள் பட்டியலில் சிகிரியா முதலிடம் பெற்றுள்ளது. 'Booking.com' என்ற வலைத்தளமே இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் சிகிரியா சாகசம் மற்றும் அமைதியின் மறக்கமுடியாத கலவையை வழங்குகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



## எரிவாயு விலைத்திருத்தம்: அமைச்சரவை பின்னடிப்பு!

கொழும்பு, பெப். 11

பெப்ரவரி மாதத்துக்கான எரிவாயு விலைத்திருத்தத்துக்கு அமைச்சரவை இன்னமும் அனுமதி வழங்கவில்லை என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. உலக சந்தையில் எரிவாயு விலைக்கேற்ப நாட்டில் எரிவாயு விலை மாதந்தோறும் திருத்தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் 4ஆம் திகதி அறிவிக்கப்படும். இருப்பினும், பெப்ரவரி மாதத்திற்கான எரிவாயு விலைத்திருத்தம் இதுவரை அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)



நாளை
புதன்கிழமை - தை - 30
12.02.2025
சுபநேரம் : 05.04 - 06.34
ராகுகாலம் : 12.34 - 02.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல்கள் உடன் நடத்தப்படவேண்டும்!

## தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

**கொழும்பு, பெப். 11**

**நாட்டில் மகாணசபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம், பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வுகண்ட பின்னரே அரசியலமைப்புத் தொடர்பான விடயங்களைக் கையிலெடுக்கத் திட்டமிட்டுள்ளது. ஏனெனில் தற்போதைய நிலையில், இரண்டு நடவடிக்கைகளையும் சமநேரத்தில் மேற்கொள்ளும் இயலுமையில் அரசாங்கம் இல்லை. அரசியலமைப்புத் தொடர்பான விடயம் மிகவும் முக்கியமானது. வடக்கு, கிழக்கில் உள்ள மக்களின் பிரதான எதிர்பார்ப்பு தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேவை என்பதே. எனவே, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்காக அரசியலமைப்புத் தொடர்பான பிரச்சினைகளை புறமொதுக்கமுடியாது. இலங்கையில், மாகாணசபைகளுக்கான தேர்தல் உடன் நடத்தப்படவேண்டும். மாகாண சபைகளை வினைத்திறனாகச் செயற்படுத்தினால் மட்டுமே வடக்கு, கிழக்கு மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கமுடியும் - என்றார். (ம-இ)

**வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவு சங்கம்**
**வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்.**

மேற்படி சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 08.03.2025 சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க பிரேரணைகள் இருப்பின் அப்பிரேரணைகளை 23.02.2025 ம் திகதிக்கு முன்பாக செயலாளருக்கு எழுத்து மூலம் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**செயலாளர்**

தொடர்புகளுக்கு :- 024 222 3367

(CS/57478) J-1

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




**யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய**

மாணவியும் **சதீஸ்கரன்-திருச்செல்வி**

தம்பதியரின் செல்வப் புதல்வியுமாகிய

**செல்வி ச. தசாயினி**

அவர்கள் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தில் சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சித்திகளைப் பெறவேண்டும் என இறைவனை வேண்டி இவரை வழிப்படுத்திய பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர் திரு. த. தயானந்தன் அவர்களையும் பாராட்டி வாழ்த்தி நன்றி தெரிவிக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:-**

**தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், பெரியப்பா குடும்பம் (கனடா), அத்தை குடும்பம் (லண்டன்), மற்றும் உறவினர்கள்.**

(CS/2484) J-1



யாழ்.பல்கலைக்கழக

## கிளிநொச்சி வளாகத்தில் தேவாலயம் திறந்துவைப்பு

கிளிநொச்சி, பெப்.11

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் அமைக்கப்பட்ட தேவாலயம் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. யாழ்.மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நிகழ்வில் பங்கேற்று இந்தத் தேவாலயத்தைத் திறந்து வைத்தார். நிகழ்வில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தவர் பேராசிரியர் சிறீசற்குணராஜா, பீடாதிபதிகள், விரிவுரையா ளர்கள், பங்குத்தந்தையர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)

## தமிழ் ஊடகத்துறையில் நிரப்பமுடியாத வெற்றிடம்

### பாரதியின் மறைவுக்கு பேராசிரியர் ரகுராம் இரங்கல்

யாழ்ப்பாணம்,பெப்.11

தமிழ் ஊடகத்துறையில் நிரப்பமுடியாத வெற்றிடம் ஈழத்தின் மூத்த ஊடக ஆளுமை பாரதி அண்ணாவின் மறைவு என்று பேராசிரியர் ரகுராம் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட இரங்கல் குறிப்பில், ஆழமான பார்வைகளால் அனைத்தையும் அறிந்து வைத்திருந்தவர் பாரதி அண்ணா. அமைதியான பேச்சும், அதிராத சுபாவமும் அவரது அடையாளம். தமிழ் ஊடகத்துறையில் நிரப்பமுடியாத வெற்றிடமாய் உங்கள் நினைவு கனத்துக் கிடக்கின்றது - என்றுள்ளார். (ச-66)



## சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிழக்கு மக்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,பெப்.11

ந்நிதியான் ஆச்சிரமத்தால் கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில், விநாயகபுரம் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு 300,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப்பொருள்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. (ச-33-27)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.11

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் பாடிய 'உரும்பையம் பதி பேய்ச்சி அம்மன் திருவந்தாதி' நூல் வெளியீட்டு விழா கந்தசுவாமி கோவிலடியிலுள்ள இணுவில் அறிவாலயத்தில் நாளை புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இந்துக் கற்கைகள்பீட பேராசிரியர் ச.முகுந்தன் ஆற்றவுள்ளார். (ச-41)



வவுனியாவில்

## வெள்ள இடர் பாதிப்பு; சீனாவால் பொருள்கள்

வவுனியா, பெப்.11

வவுனியாவில் வெள்ள அனர்த்தத்தால் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு சீனத் தூதரகத்தால் உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சீனத்தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூ.யன்வெய் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் 350 குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

அதேவேளை வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 470 குடும்பங்களுக்கு 6ஆயிரத்து 490ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் சீனாவால் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-18,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்பொழிவும் குருபூஜையும்

யாழ்ப்பாணம், பெப். 11
சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், சித்தானைக்குட்டி சுவாமிகள் குருபூஜை விழாவும் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் ஆன்மிக விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியற்கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் சமூகமாமணி கலாநிதி பா. தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ.த. குமரனின் 'ஈழத்து சித்தர்களில் சித்தானைக்குட்டி சுவாமிகள்' எனும் சொற்பொழிவும், இடம்பெறும். (ச-25)

# கந்தபுராணச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 11
யாழ். நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத்தொடர் - 13 சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞான பானு , சிவஸ்ரீ இராஜேந்திரசுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரை யாற்றுவார். இளஞ்சைவப்புலவர் , க. கயிலைவாசன் 'சரவணப்பமலம்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

# சட்டவிரோத தையிட்டி விகாரை தகர்க்கப்படவேண்டும்

## ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி கருத்து

வவுனியா,பெப்.11
**யாழ்ப்பாணம் தையிட்டி விகாரை உடைக்கப்படவேண்டியதுடன் அதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டத்துக்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி முழுமையான ஆதரவு வழங்கும் என்று அந்தக் கூட்டணியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.தையிட்டி விகாரைக்கு எதிராக இடம்பெறும் போராட்டத்துக்கு ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முழுமையான ஆதரவைத் தெரிவிக்கும்.

வடக்கு-கிழக்கில் பிக்குகள் மற்றும் சில திணைக்களங்கள் நினைத்ததை செய்யும் ஒரு நிலை காணப்படுகின்றது. எனவே இந்த விகாரை உடைக்கப்படவேண்டும் என்பதே எமதும் மக்களினதும் நிலைப்பாடு. அதற்கான ஆதரவை நாங்கள் வழங்குவோம் என்றும் குறிப்பிட்டார். (ச-110)

தென்மராட்சியில்

# ஓய்வூதியர் நலன்கருதி கடமைநேரம் நீடிப்பு

ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தென்மராட்சிக் கிளையின் நிர்வாகிகள், ஓய்வூதியர்களின் நலன்கருதி பிரதி திங்கட்கிழமைகளில் பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 1 மணிவரை கடமையில் ஈடுபடவுள்ளனர். இதன்போது ஓய்வூதியர்களுக்கு நிதியத்தினால் கிடைக்கும் நலன்கள், பிரச்சினைகள் தொடர்பாக நிர்வாகத்தினருடன் கலந்துரையாடலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

# சர்வாதிகார விகாரை இடிக்கப்படவேண்டும்

## சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 11
மக்களின் விருப்புக்கு மாறாக தையிட்டியில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வாதிகார விகாரை இடிக்கப்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
சமகால அரசியல் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது இனவாதக் கருத்தல்ல. சட்டம் அனைவருக்கும் சமனானது எனக் கூறும் இன்றைய அரசு தனது நிலைப்பாட்டில் இருந்து படிப்படியாக மாறி தனது சுயநிலைக்கு வருகின்றது. தையிட்டி விகாரை விவகாரம் இன்று தமிழ் மக்களின் இருப்புக்கு சவாலாக மாறியுள்ளது. மக்களின் காணி அவர்களுக்கே உரியது. ஆனால் இன்று அது மறுக்கப்படுவதாகத் தெரிகின்றது. நீண்டகாலமாக இராணுவத்தினரது பிடிக்குள் இருந்த எமது மக்களின் காணிகளில் அவர்களுக்குத் தெரியாமலேயே இந்த விகாரை நிர்மாணிக்கப் பட்டுள்ளது. அத்துடன் அரசினதும் இந்த பௌத்த கட்டமைப்பினதும் இந்த அதிகார இறுமாப்பு எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதொன்றல்ல. அத்தோடு விகாரையின் சுற்றுப்புறத்திலுள்ள வேறு சில மக்களின் காணி நிலங்களும் சட்டவிரோதமாகப் பறிக்கப்படும் அபாயநிலையில் உள்ளன. அந்தவகையில் அந்தப் பகுதி மக்கள் நாளைமறுதினம் புதன்கிழமை மேற்கொள்ளும் எதிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க நாம் ஆதரவை வழங்குவோம் - என்றார். (ச-இ)



# கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 11
இணுவில் பொதுநூலகத்தின் கனடா அமைப்புக்குழுவின் நிதி அனுசரணையில், தரம் 1 இல் இணையும் மாணவ மாணவியர்களுக்கு 16 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு இணுவில் பொது நூலகத் தகவல்தொழில்நுட்ப விரிவுரை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் இணுவில் பொதுநூலகப் போசகர் பேராசிரியர் .க. தேவராஜா , சிறுவர் திறன் விருத்தி மையத்தின் அதிபர் திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை, யாழ். இணுவில் இந்துக் கல்லூரியின் அதிபர் .வி.உதயமோகன், நிர்வாக உறுப்பினர்கள் அங்கத்தவர்கள், ஆர்வலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர். (ச-25)

# சா/தர மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்குகள்

சாவகச்சேரி , பெப். 11
சாவகச்சேரி லயன்ஸ்கழகம் மற்றும் ஏ9 வீதி மீசாலையிலுள்ள உயர்கலைக் கல்லூரி ஆகியவற்றின் ஏற்பாட்டில், யாழ்,- கிளிநொச்சி வளவாளர்களின் ஒருங்கிணைந்த சேவையில், க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்குகள் உயர் கலைக்கல்லூரி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ளன.

இந்தக் கருத்தரங்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

சமயம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, தமிழ் உள்ளிட்ட பாடங்களில் கருத்தரங்குகள் இடம்பெறுகின்றன.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களை இதில் பங்குபற்றி பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-25, 9)



# கிளிநொச்சியில் சீனா உதவி

கிளிநொச்சி, பெப். 11
கிளிநொச்சியில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 150 பேருக்கான நிவாரணப்பொருள்களை இலங்கைக்கான சீனத் தூதரகம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கையளித்துள்ளது.

சீனத் தூதரக பிரதிப் பிரதானி சூ யன்வெய் நிகழ்வில் பங்கேற்று உதவிப் பொருள்களை வழங்கிவைத்தார். நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் எஸ். முரளிதரன், சீனத் தூதரகத்தின் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-25,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாகண்டலில் மக்கள் சந்திப்பு!

கொழும்பு, பெப்.11

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் பகுதியில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்துரைராசாரவிகரன்மக்கள்குறை கேள் சந்திப்பொன்றை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தினார். இதன்போது மன்னாகண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் காணப் படும் வளப்பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் அதிக கவ னம் செலுத்தப்பட்டது. அத்தோடு மன் னாகண்டல் கிராமத்தில் காணப்படும் ஏனைய பிரச்சினைகள், குறைபாடுகள் தொடர்பிலும் கிராமமக்களால் நாடாளு மன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

(ச-246- 26)

## அறை வாடகைக்கு தேவை

52 வயதுடைய ஒருவர் தங்குவதற்கு யாழ்ப்பாணத்தில் அறை வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:

**076 661 9476**

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ
19 . 03 . 1985

கண்நெகிழ
11 . 02 . 2007



**செல்வன் பத்மகாந்தன் சஞ்ஸீத்**

(முன்னாள் மாணவன் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
S.S.M. பொறியியல் கல்லூரி - சேலம், இந்தியா)

ஓயாத கடல் அலைபோல் ஓயவில்லை உன் நினைவலைகள்
பூமிப் பூஞ்சோலையில் வண்ணப்பூவாக மலர்ந்த நீ !
காலமெல்லாம் எங்களுடன் கலந்திருப்பாய் என்றிருந்தோம்.
எள்ளளவும் இரக்கமின்றி இறைவன் உனை அழைத்ததென்ன ?
துன்பத்தின் எல்லை கண்டோம் துவண்டு இங்கு வாடுகின்றோம்.
தாங்க எம்மால் முடியவில்லை, சஞ்சலம் தான் வாழ்வாச்சு !!
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"புனித வாசம்"
மீசாலை கிழக்கு, மீசாலை.

(CR/44260) J-1

குடும்பத்தினர்

## மாபெரும் சதுரங்கப் போட்டி 2025

இடம் : மீசாலை டச்சு வீதி- கேணியடி சந்தி தேத்தாவடி, கரும்பி மாவலடி கந்தசாமி ஆலயம்.
விண்ணப்பங்கள் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்படும்.
காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை
11.02.2025, 12.02.2025 இரண்டு நாட்களும் நேரடியாக விண்ணப்பிக்கலாம்
30.04.2025 வரை ஏற்றுக்கொள்ளப்படும்
போட்டி 12.05.2025 காலை 08.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெறும்.

| வயதுப் பிரிவுகள் | பரிசுத் தொகை |
|---|---|
| 5 வயது வரை | 10,000 |
| 5-8 வயது வரை | 10,000 |
| 9-14 வயது வரை | 10,000 |
| 14-18 வயது வரை | 10,000 |
| 18 வயதுக்கு மேல் | 10,000 |

மேற்படி 5 சுற்றுக்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 5 பேரும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள் இவர்களில் ஒருவருக்கு 100,000 ரூபா பரிசு மீசாலை Chess Champion பட்டம் வழங்கப்படும்.

| அனுமதிக்கட்டணம் | ரூபா |
|---|---|
| 14 வயதுக்கு கீழ் | 250 |
| 14-18 வயது | 500 |
| 18 வயதுக்கு மேல் | 1000 |
| பாடசாலை clubs | 5000 |

எத்தனை பேரும் பங்கு பற்றலாம் GAMES BEST OF THREE GAMES 10 Minutes Each Game
வரும் பொழுது Chess Board கொண்டு வரவும்.
கோவில் மண்டபத்தில் போட்டி நடைபெறும்.
தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 077 198 5872, 076 719 8291
ஒரு விளையாட்டுக்கான சதுரங்கப் பயிற்சிக் கட்டணம் 100ரூபா
பதிவுகளுக்கு மேலே உள்ள இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்
"ரகு" PEACER நிறுவன முகாமையாளர்
இதில் கிடைக்கும் வருமானம் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தப்படும்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 04 . 1935

மறைவு
10 . 02 . 2025



**வடிவேலு இராசாம்பாள்**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடல் மற்றும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு இராசாம்பாள் அவர்கள் நேற்று (10.02.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2025) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கல்வியங்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 01.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்


இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
14 . 08 . 1942

விண்ணில்
12 . 01 . 2025



**அமரர் கந்தையா இராஜரட்ணம்**

எங்கள் குடும்பத்தின் தலைவனாய்
சிறந்து விளங்கிய எங்கள் பாசமிகு
அப்பாவே!
அன்பு என்ற மழையில் எம்மை
நனைய வைத்து
குறைவிலா பாசத்தை எமக்கு
அள்ளித் தந்த எம் தெய்வமே!
உங்கள் இழப்பை தாங்க முடியவில்லை
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
மானிப்பாய் மருதடியானையும்,
நல்லூர் முருகனையும் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

இல.44, புகையிரத வீதி,
கந்தர்மடம்.

(Cs.57476) (N.I)

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 15.01.2025 புதன்கிழமை அன்று
இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

**அமரர் கைலாசபதி ஸ்ரீகமலாதேவி**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.02.2025) புதன்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 14.02.2025 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **சரஸ்வதி மண்டபத்திலும் (ராஜா கிறீம் கவுஸ்)** நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

49/8, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(cs.57459) (N-I)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 05 . 1932



மறைவு
07 . 02 . 2025

## திருமதி கனகம்மா இராசமுத்தையா

யாழ்ப்பாணம் நல்லூர் நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் சிட்னி Australia வை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா இராசமுத்தையா அவர்கள் கடந்த 07.02.2025 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாயன்மார்கட்டு சுந்தரம்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அருமை மருமகளும், டாக்டர் இராசமுத்தையா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம், பாலசிங்கம், சச்சிதானந்தம், லட்சுமிப்பிள்ளை, நாகேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி, விமலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும், முருகதாஸ், இரத்தினராசா, பொன்னரசி ஆகியோரின் பாசம் நிறைந்த தாயாரும், ஜெயகௌரி, குமுதினி, கோபாலரட்ணம் ஆகியோரின் மாமியாரும், சுசி, கார்த்தி, சிந்து, Piyush, கௌரீசன், ஆஷா, அஷ்வினி, நிதர்சன்,ஜாதவி, செந்தூரன், ஜனகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், Karna, Kali, Dravin, Arya, Xaviar, zia, Aran, Swasthi, Hirushvi ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2025) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் Macquarie மயானத்தில் நடைபெறும், இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

Murugathas: +61 411 098 537
Ratnarajah : +61 423 715 446
Ponnarasi : +47 934 933 94

(CS/57482) J-1

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு
26 . 01 . 1936



உதிர்வு
08 . 02 . 2025

## இராசலிங்கம் மாணிக்கதேவி (குஞ்சக்கா)

உடையார் ஒழுங்கை, பலாலி வீதி, ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் மாணிக்கதேவி அவர்கள் கடந்த 08.02.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம்-பரிபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் சிவசிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசிதம்பரம் சிவஞானசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருந்தவநாயகம், சோமசர்மா இராஜேஸ்வரி, ஞானகலை, அம்பிகாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் சிவாஜினி, சாந்தினி (UK), சிவாகரன் (Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாகுணலிங்கம் , ஆனந்தபாஸ்கரன் (UK), நந்தினி (Colombo) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ராகேஷ்-கவிதா (France), தினேஷ்-ஹம்சா (France), மயூரா-மகரிஷ் (Germany), உமேஷ் (Engineer)-தேனுஜா (UK), துஷாரா-ஏபிரகாம் பிரசாத் (முன்னாள் ஆசிரியர்-St.John's College, Jaffna, final year student-Sri Lanka Law College), சாயிஷா (Dentist-UK), கிருஷானா (அம்மு)-கோகுலன் (Australia) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திஷானி, திபானி, திஷ்விகா, திகனிஷ், திகஷ்விக் (France), மகிமை, மிகன் (Germany), உருத்திரலயா, உதித் (UK), மீனா (Australia) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சிவாஜினி தயாகுணலிங்கம் (மகள்)

உடையார் ஒழுங்கை,
ஊரெழு கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(CS 57483) V-1

077 662 4432 - தயாகுணலிங்கம் (மருமகன்)
003 365 235 5764 - தினேஷ் (பேரன்)
078 697 9845 - துஷாரா (பேர்த்தி)

## ரணில்,...

லான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி என்பன இணைந்து செயற்படுவது தொடர்பான பேச்சுவார்த்தை இடம் பெற்று வருகிறது. என்றாலும் இந்த பேச்சுவார்த்தை தொடர்ந்து கொண்டிருக்கமுடியாது. அதனால் ரணில் மற்றும் சஜித் ஆகிய இரண்டு தலைவர்களும் விரைவாக ஒரு மேசைக்கு வந்து கலந்துரையாட வேண்டும். தொடர்ந்தும் மக்களை ஏமாற்றமுடியாது. இல்லாவிட்டால் அவர்கள் மக்களின் சாபத்துக்கு ஆளாவார்கள்.

ரணில் சர்வதேசத்தால் ஏற்றுக்கொண்ட தலைவர். அவரின் ஆலோசனை இந்த நாட்டுக்குத் தேவை. அதேபோன்று சஜித் இந்த நாட்டு மக்களின் மனதை வென்ற தலைவர். அவரின் தேவைப்பாடு நாட்டுக்கு இருக்கிறது. இவர்கள் இருவரின் இணக்கப்பாடு மக்கள் எதிர்பார்க்கும் ஒன்று. எனவே, மக்களின் எதிர்பார்ப்பை அவர்கள் இருவரும் ஏமாற்றக்கூடாது. நாட்டின் 76 வருட சாபத்தை ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சியின் மேல் போடமுடியாது. இந்த சாபத்துக்கு தோல் கொடுத்தது மக்கள் விடுதலை முன்னணியாகும் - என்றார். (அ-ம-இ)

## நாடாளுமன்று...

யில், உயர்நீதிமன்றத்தின் தீர்மானங்களை நாடாளுமன்றத்துக்கு தெரியப்படுத்தும் விதமாகவே எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றம் கூட்டப்படவுள்ளது.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி தலைமையில் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்றுத் திங்கட்கிழமை கூடியது. இதன்போதே, பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பான முடிவு எட்டப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தல்களை விரைவில் நடத்துமாறு உயர் நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் பின்னணியில், தேர்தலை மேலும் தாமதப்படுத்தக்கூடாது என்பதை சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் சுட்டிக்காட்டினார். இதையடுத்து, உள்ளூராட்சித் தேர்தல்கள் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2 மணி முதல் பி.ப 7 மணிவரை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## மக்களுடன்...

விகாரை கட்டப்பட்டு, வழிபாடும் இடம் பெற்று வருகின்றது. இதுதொடர்பில் அன்று குரல் எழுப்பாதவர்கள், இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்காதவர்கள் இன்று இதனை பூதாகரமான பிரச்சினையாகத் தூக்கிப்பிடிப்பதற்கு முற்படுகின்றனர். இதனை உண்மையிலுமே இதய சுத்தியுடன் செய்கின்றனரா? அல்லது உள்ளாட்சிசபைத் தேர்தலுக்கான துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த முயல்கின்றனரா?

இந்த நாட்டில் இனவாதம் மற்றும் மதவாதத்தை மக்கள் நிராகரித்துள்ளனர். அவை மீண்டும் தலைதூக்குவதற்கு இடமளிக்கமுடியாது. இந்தப் பிரச்சினைக்கும் கூடிய விரைவில் மக்களுடன் கலந்துரையாடி, பொருத்தமான தீர்வை எட்ட... குமுறையைக் கையாள்வதற்கு தீர்மானித்துள் ளோம்.

விகாரை அமைக்கப்பட்டுள்ள இடம் மக்களுக்குரியது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனவே, மக்களுக்கு இழப்பீடு அல்லது மாற்றுக் காணிகளை வழங்கவேண்டிய தேவை இருக்கின்றது. மிக அதிகமான காணியை விகாரை உரிமையாளர்கள் தம்வசப்படுத்தியுள்ளனர். விகாரையை உடைப்பதன்மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகிட்டுமா என்பது பற்றியும் சிந்திக்கவேண்டும். எனவே, இதற்கு சுமுகமான தீர்வை எட்டவேண்டுமே தவிர, இனவாதத்தை, மதவாதத்தை தூண்டும் வகையிலான தீர்மானத்தை எடுக்கக் கூடாது - என்றார். (அ-ம-44-26)

## திஸ்ஸ விகாரைக்கு...

தையிட்டிப் பகுதியில் உள்ள சுமார் 7 ஏக்கர் காணியை அடாத்தாகக் கையகப்படுத்தி, எவ்வித அனுமதிகளும் இன்றி சட்டவிரோதமாக திஸ்ஸ விகாரை கட்டப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இருந்த மக்கள் யுத்தம் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். பின்னர் அந்தப் பகுதியை உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினர் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

யுத்தம் நிறைவடைந்த நிலையில் மக்கள் மீள்குடியேற, இராணுவத்தினர் கட்டம் கட்டமாக அனுமதித்தனர். அவ்வேளை தற்போது விகாரை அமைந்துள்ள மற்றும் அதனை சூழவுள்ள சுமார் 14 ஏக்கர் காணியில் மக்கள் மீள்குடியேற இதுவரை அனுமதிக்கப்படவில்லை. இதைத் தொடர்ந்தே அங்கு சட்டவிரோதமாக விகாரை கட்டப்பட்டது.

இது தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சுட்டிக்காட்டிய போதிலும், பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களின் முடிவுக்கு மாறாகவே இந்த விகாரை கட்டப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, விகாரையை அகற்றவேண்டும் என்று வலியுறுத்தி இன்றும் நாளையும் அங்கு போராட்டங்கள் நடைபெறவுள்ளன. (அ-ம-இ)

## மாகாணசபை...

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமஷ்டிக் கோரிக்கை என்பது நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. சமஷ்டியா, ஒற்றையாட்சியா அல்லது ஐக்கிய இலங்கையா என்ற வார்த்தைகளுக்குள் தங்கியிருக்க நாம் முற்படவில்லை. மாறாக சிறுபான்மையின மக்களின் தனித்துவத்தை ஏற்றுக்கொள்ளும் அரசியலமைப்பைக் கொண்டுவருவதில் உறுதியாக உள்ளோம். மாகாணசபை என்பதை தாம் வென்றெடுத்த உரிமை என்றுதான் தமிழ் மக்கள் கருதுகின்றார்கள். ஆதலால், அந்த உரிமையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கைவைக்காது. இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த வருடத்தின் முற்பகுதியில் மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். மக்களுக்கான எமது நேர்வழி அரசியல் பயணத்தின்போது எதற்கும் அஞ்சி, அடிபணியப்போவதில்லை. போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற்றட்டும். ஏனெனில் மக்களின் ஆதரவும் மக்களின் சக்தியும் எமது பக்கமாக உள்ளது. வறுமை ஒழித்தல், டிஜிட்டல்மயமாக்கல் உட்பட ஒட்டுமொத்த நாட்டையும் மேம்படுத்தவதற்கான திட்டமே 'தூய இலங்கை' திட்டமாகும் - என்றார்.

(அ-ம-44-26-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனாவின் 'சகோதர பாசம்' தமிழர்களுடனும் தொடரும்

## சீனப் பிரதித் தூதுவர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.11**

**சீன அரசாங்கம் இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு இடையில் நட்புறவைப் பேணுவதற்கு விரும்புகின்றது. சீனாவின் சகோதர பாசத்தை வெளிப்படுத்தும் முகமாக நாம் வடக்குக்கு உதவிகளை வழங்கி வருகின்றோம் என்று சீனப் பிரதித் தூதுவர் சூ யன்வெய் தெரிவித்துள்ளார்.**

சீனாவின் 'சகோதர பாசம்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணப் பொருள்கள் நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவயதிலே யாழ்ப்பாணம் பற்றியும் இலங்கைத் திருநாடு பற்றியும் நான் அறிந்துள்ளேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த உதவித் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் வழங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

சீன அரசாங்கம் இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு இடையில் நட்புறவைப் பேணுவதற்கு விரும்புகின்றது.

அத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் 'கிளீன் ஸ்ரீலங்கா' செயற்றிட்டத்தின் மூலம் இலங்கை முன்னேற்றம் காண்கின்றது.

இந்தச் செயற்றிட்டத்துக்கு சீன அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளிக்கும். இலங்கைத்திருநாடு மேலும் சுபீட்சமடையவேண்டும்- என்றார். (ச-125.9.66)

# நீதித்துறை மீது அழுத்தம்: அரசு கைவிடவேண்டும்

## கூறுகிறார் நாமல்



கொழும்பு,பெப்.11

அரசாங்கமானது நீதித்துறை, சட்டமா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றை சவாலுக்கு உட்படுத்தும் செயற்பாடுகளையும் நிறுத்தவேண்டும். அந்தவகையில் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பில் விசாரணைகளுக்குப் பாதிப்புகள் ஏற்படாதவாறு விசாரணைச் சுருக்கமொன்றை நீதியமைச்சர் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கிய மக்களுக்கு இந்த அரசாங்கம் அநீதி இழைத்துள்ளது. தாம் கூறிய அனைத்தும் பொய் என்பதை அரசாங்கமே ஒத்துக்கொண்டதைப் போன்று செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. பழைமை முறையிலேயே இந்த அரசாங்கத்தின் ஆட்சியும் தொடர்கின்றது.

சட்டத்துறை மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதையும் அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பில் நீதி அமைச்சர் நாடாளுமன்றத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும். இந்த வழக்குத் தொடர்பில் எத்தனை சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்? விசாரணைகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டுவருகின்றன? என்பது குறித்த சுருக்கமொன்றை விசாரணைகளுக்குப் பாதிப்புகள் ஏற்படாதவாறு நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும்- என்றார். (ச-33)

# அநீதியை ஒழிப்பதற்கு பேனா ஏந்தியவர் பாரதி!

## கடற்றொழில் அமைச்சர் இரங்கல்!

கொழும்பு,பெப்.11

சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி அரசியல், பொருளாதாரம் எனச் சகல துறைகளிலும் சிறந்த ஆக்கங்களை வெளியிட்டவர். அநீதிக்கு எதிராக எழுத்து ஆயுதும் ஏந்திப் போராடிய ஓர் ஊடகப் போராளி அவர் என்று கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட இரங்கல் செய்திக்குறிப்பில், சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதியின் மறைவு பெரும் வேதனையளிக்கின்றது. இலங்கையில் அச்சு ஊடகத் துறையில் 40 வருடங்களுக்கும் மேல் தடம்பதித்தவர். அவர் எழுத்தாற்றல் மூலம் தனக்கெனத் தனித்துவமான இடத்தைத் தக்கவைத்துக்கொண்டவருமாவார்- என்றுள்ளது. (ச-33-66)

# இறைச்சி, முட்டை விலைகள் வீழ்ச்சி

## உற்பத்தியாளர் சிரமம்

கொழும்பு,பெப்.11

கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதால் உற்பத்தியாளர்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் என்று அகில இலங்கை கோழிப் பண்ணை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய கால்நடைத் தீவனமாக மக்காச்சோளத்தை மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தீ வைத்தோரிடமிருந்தும் நட்டஈட்டைப் பெறுங்கள்

## தயாசிறி சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.11


அரகலயப் போராட்டத்தின்போது வீடுகளுக்குத் தீ வைத்ததாலேயே அரசாங்கத்தால் நட்டஈடு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் தீ வைத்தவர்களிடமிருந்து அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட போராட்டத்தின்போது 42 நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டது. அதேபோல் பிரதேச அரசியல்வாதிகள் 72பேருக்கும் 500 மில்லியன் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்த வீடுகளுக்குத் தீ வைப்பதற்கு வந்தவர்களுக்கு வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் பொலிஸ்பீட அறிக்கையை நாங்கள் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க இருக்கின்றோம். நட்டஈடு பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட்டவர்களின் அணியைச் சேர்ந்தவர்களும் அதில் உள்ளடங்குகின்றனர்.

எனவே நட்டஈடாக வழங்கப்பட்ட பணத்தை வீடுகளுக்குத் தீ வைத்தவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேநேரம் மதிப்பீட்டுத் தொகையைவிட அதிக பணம் பெற்றிருந்தால் அந்தப் பணத்தையும் மீளப் பெற்றுக்கொள்ளவேண்டும் - என்றார். (ச-33)



யாழ். மாவட்ட மீனவ அமைப்பின் பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் உதவித் தூதுவர் சந்தித்தார். குறித்த சந்திப்பில் சீன நாட்டினால் வடமாகாண மீனவர்களுக்கு வழங்கப்பட்ட வலைகள் மற்றும் உணவுப்பொதிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் வடக்கு மீனவ சமூகத்துக்கு சீனாவின் உதவிகள் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் மீனவர்களால் முன்வைக்கப்பட்டது. (ச-33-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளவி...

பட்டுள்ளனர். வீதியால் மக்கள் சென்று கொண்டிருந்தபோது, கூட்டமாகப் பறந்துவந்த குளவிகள் அவர்களைத் தாக்கின என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட ஒன்பது பேரில் இருவர் சிறுவர்கள் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-18)

## தையிட்டி...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நாட்டில் அமைந்துள்ள எந்த மதத்தலங்களையும் அகற்றமுடியாது. அவ்வாறு செயற்பட்டால், அது மத ரீதியான, இன ரீதியான வன்முறைகளுக்கே வழிவகுக்கும். மதத்தலங்களை வைத்து அரசியல் செய்வதை கட்சிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் ஏற்கனவே நேரில் பேச்சு நடத்தியுள்ளார். அவர்கள் இணக்கமான தீர்வுக்குவர சம்மதம் தெரிவித்துள்ளார்கள். பலர் மாற்றுக் காணிக்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். இந்த நிலையில், காணி உரிமையாளர்களைத் திசைதிருப்பி அவர்களைத் தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குப் பயன்படுத்தச் சிலர் முற்படுகின்றனர் - என்றார். (அ-ம-இ)

## திஸ்ஸ...

தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரை சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமானது. இந்த விகாரை அமைந்துள்ள காணியும் தற்போது விகாரை நிர்வாகத்துக்கே உரித்தானது. எனவே, இந்த விவகாரம் தொடர்பில் கதைப்பதற்குத் தமிழ் மக்களுக்கும், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் எந்த அருகதையும் கிடையாது.

தையிட்டி திஸ்ஸ ராஜமகா விகாரையை இடிக்க வேண்டும் என்று கூச்சலிடும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்த விடயங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த விகாரையில் தமிழர்கள் எவரும் கைவைக்க இடமளிக்கமாட்டோம். இந்த விகாரைக்கு எதிராகப் பௌர்ணமி தினத்தன்று தமிழர்கள் போராட்டம்நடத்திஎம்மைமிரட்டமுடியாது - என்றார். (அ-ம-இ)

## டுபாய்...

ஜனாதிபதி அங்கு சென்றுள்ளார். இந்தப் பயணத்தின்போது, டுபாயில் நடைபெறவுள்ள உலகத் தலைவர்கள் உச்சிமாநாட்டிலும் ஜனாதிபதி அநுர உரையாற்றவுள்ளார்.

தொழில்நுட்பப் புத்தாக்கம் உள்ளிட்ட விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தப்படவுள்ள இந்த மாநாட்டில், 150 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமாரவுடன், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அரசாங்கத்தின்முக்கியஸ்தர்களும் பயணம் மேற்கொண்டுள்ளனர். இந்தப் பயணத்தின்போது, உலகத் தலைவர்களுடன் இருதரப்புச் சந்திப்பிலும் ஜனாதிபதி அநுர ஈடுபடவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-இ)

## வடமாகாண...

செயலகங்களில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. சீனத் தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூயன்வெய் தலைமையில், சீனத் தூதரக அதிகாரிகளால் இந்த உதவித் திட்டங்கள் மக்களிடம் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில், வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-ம-26-56-23)

(தொடர்புடைய செய்திகள் பக்கம்: 06,07,10)

## நாடெங்கும்...

அனுமதி வழங்கியுள்ளது. நுரைச்சோலை நிலக்கரி மின்னுற்பத்தி நிலையம்தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்படும் வரை, நாடெங்கும் பகுதியளவில் மின்வெட்டை நடைமுறைப்படுத்துவதற்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மின்சாரசபை கோரிக்கை விடுத்திருந்தது. அந்தக் கோரிக்கைக்கே இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, மாலை 3.30 மணி முதல் இரவு 9.30 மணிக்கிடையில் ஒன்றரை மணித்தியாலங்கள் சுழற்சி முறையில் மின்வெட்டை அமுல்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அட்டவணையொன்றும் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

மின்வெட்டு அமுல்படுத்தப்படும் பிரதேசங்களில் ஏ, பி, சி, டி என அடையாளப்படுத்தப்பட்டுள்ளவை ஒரு குழுவாகவும், இ, எப், ஜி, எச், யு, வி என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் இன்னொரு குழுவாகவும், ஜ, ஜெ, கே, எல், பி, கியூ என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் மற்றொரு குழுவாகவும், ஆர், எஸ், ரி, டபிள்யு ஆகிய பிரதேசங்கள் வேறொரு குழுவாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

முதலாவது குழுவில் உள்ளடங்கும் பிரதேசங்களில் மாலை 3.30க்கும் 4 மணிக்கும் இடையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு 5 மணிக்கும் 5.30க்கும் இடையில் மீள வழங்கப்படும். இரண்டாவது குழுவில் உள்ளடங்கும்பிரதேசங்களில் மாலை 5 மணிக்கும் 5.30க்கும் இடையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு 6.30க்கும் 7 மணிக்கும் இடையில் மீள வழங்கப்படும்.

மூன்றாவது குழுவில் உள்ளடங்கும் பிரதேசங்களில் 6.30க்கும் 7 மணிக்குமிடையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, 8 8.30க்கும் இடையில் மீள வழங்கப்படும். நான்காவது குழுவில் உள்ளடங்கும் பிரதேசங்களில் 8க்கும் 8.30 மணிக்கும் இடையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, 9.30க்கும் 10 மணிக்குமிடையில் மீள வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## சாரதிக்கு...

யில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவந்த நிலையில், சந்தேகநபர்கள் மூவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113)

# மரண அறிவித்தல்

# சபாரட்ணம் யோகேஸ்வரி



அன்னை மடியில்
02.01.1941

இறைவன் அடியில்
10.02.2025

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி சைவப் பாடசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் யோகேஸ்வரி நேற்று (10.02.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சபாரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான லீலாவதி, பேரானந்தசிவம் மற்றும் ஜெயமணியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், உமாதேவி, கனகரட்ணம் ஆகியோரின் மைத்துனியும், ஏகேந்திரன் (இந்திரன் - தர்ணிகா மோட்டோஸ்), சுபோஜினி, றாஜினி, சுபோதரன் (சிவா), யசோதரன் (யசோமோட்டோஸ்), நந்தினி, நிஷாந்தினி, சிறிதரன், காலஞ்சென்றவர்களான உதயகுமார், சறோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமதி, சண்முகலிங்கம் (குஞ்சன்), ஜெயந்திராஜா, டர்சினி (கட்டடத்திணைக்களம்), சிந்துஷா ரவிச்சந்திரன், நகுலன் கம்சா ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சிகா, ரகுலன், தர்சன், யதுபிகா, தர்சிந்துதா, தயாகாந்தன், தர்மிளா, செந்தூரன், தர்ணிகா, நிசாந்தன், பிரசன்னா, நிசாந்தி, பிருந்தா, சிவபாதம் (ஆசிரியர்கள்), கபில்ராஜ், கோபிராஜ், ஷாரிராஜ், டிலக்சன், சானுஜா, பிருத்திகா, சர்வியா, சபிசன், சன்சயா சஜீத், டினோஷா, உசாந்தன், வர்சிதா, தனுஷ், பாணு, அதிதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விபிஷா, அதிவ், சேஷ்யா, டியானியா, நஸ்விகா, சஸ்விகன், அதிவிகா, கஷ்னா, யர்விஷ், அபிநயன், கெஸ்மிகா, அஸ்வன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப் பாடசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 723 8373, 077636 5854,
077 5017161

(CS/57481) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புத் துறைமுக மனிதப் புதைகுழியிலிருந்து 16 எலும்புக்கூடுகள் மீட்பு

கொழும்புத் துறைமுகப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் தற்போதுவரை முன்னெடுக்கப் பட்ட அகழ்வாராய்ச்சிகளில் சுமார் 16 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட் டுள்ளன. அதில் இரண்டு குழந்தைகளின் எலும்புக்கூடுகள் இருந்தன என்று தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோம தேவா தெரிவித்துள்ளார். இந் தப் புதைகுழி வழக்கமான புதைகுழி அல்ல உடல்கள் புதைக்கப்பட்ட விதம் அவை கொலை செய்யப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. அத்துடன் அதிக எண்ணிக்கையிலான உடைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகளுக்கான காலப்பகுதியை விஞ்ஞான ஆய்வுக்குப்பின்பே தீர்மானிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

**வேலைக்கு ஆள் தேவை**

யாழ் நகரை அண்மித்த பகுதியில் வீட்டு வேலைக்கு நடுத்தர வயது பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு:
077 616 7805

**வீடு வாடகைக்கு**

நவாலி வடக்கு மானிப்பாயில் வேலக்கை பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் விவேகானந்தா பாடசாலைக்கு எதிர்ப்பக்கமாக உள்ள நாச்சிமார் வீதியில் சுமார் 50m தொலைவில் அமைந்துள்ள புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 2 படுக்கை அறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 936 1496
whats app:- 0044 7944 697594
076 799 4642
(CS/57478) J-1

**அலுவலக உதவியாளர் தேவை**

சட்டத்தரணி அலுவலகத்திற்கு அலுவலக உதவியாளர் தேவை (டுட்டச்சு தெரிந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:
077 118 3366

## மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 06 . 1942



மறைவு
07 . 02 . 2025

**சிங்கராஜா மாகிறேட் (தேவரம்)**

205/3 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராஜா மாகிறேட் (தேவரம்) கடந்த 07.02.2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கராஜா-பொன்னார் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற இம்மானுவேல் (செல்வம்) அவர்களின் அன்புச் சகோதரியும் பிலோமினாவின் (German) அன்பு மைத்துனியும் சிலியாவின் (German) அன்புத் தாயாரும் எட்வேட் ஜேசுதாஸ் (German), ஜோர்ச் (German), நிக்சன் (German), குட்டி (German) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நெல்சோன் (German), டேனிடோன் (German), அதினா (German) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (12.02.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல: 180, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வைற்ஹவுஸ் அந்திய கால சேவையில் அஞ்சலி செலுத்தப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல 209,
2ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 724 3696

## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து நாகராஜா (சந்திரன் ஆசாரி)

(உரிமையாளர் - கஜேந்திரன் மரத்தொழிற்சாலை)



அன்னை மடியில்
24.12.1952

ஆண்டவன் அடியில்
08.02.2025

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவிலடி மற்றும் இல. 85, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து நாகராஜா (சந்திரன் ஆசாரி) கடந்த 08.02.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், கவிதா (ஆசிரியை - கோண்டாவில் இந்துக் கல்லூரி), லதா (சுவிஸ்), கேமமாலினி (இலங்கை), கஜேந்திரன், திருக்குமரன் (சவுதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாதன் (லண்டன்), தயாநாதன் (சுவிஸ்), இலங்கேஸ்வரி (லண்டன்), ஞானகுமார் (இலங்கை), பாலேந்திரா, சிவக்குமார் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகலட்சுமி (லண்டன்), புவனேஸ்வரி (சுவிஸ்), இராஜேந்திரம் (மட்டக்களப்பு), தேவி, புஷ்பகரி, மாலதி ஆகியோரின் மைத்துனரும், ஜெயக்குமார், துசியந்தன் (சுவிஸ்), சுரேஸ்குமார் (இ.போ.ச), குகரஞ்சினி, கௌசிகா (மருந்து கலவையாளர் - தள வைத்தியசாலை - மூதூர்), ஆகியோரின் அன்பு மாமனாரும், டர்ஷான், அக்ஷிதா, கஜந், அகன், மகிழன் ஆகியோரின் பாசமிகு பேரனும், கஜன், அபிதா, ஜேன் ஆகியோரின் தாய் மாமனும், சிந்து, சுகன்ஜா, வெங்கடேஸ், துஜானா, பவித்திரா, பதுஷா, நிதுஷன், பிரியங்கா, பிரசாந் (அனு), பிரதீக்கா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 85, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
077 735 8399
074 024 2596

(CS/) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org